உ

ஸஸ்ராஷாஷட்சக்ரபெருமாள:

நடுக்காவேரிசத்திரியாஷாடசபையின்

# இரண்டாவதுவருட சரித்திரம்



இஃது

ப்ரம்மவித்தியாயந்திரசாலையில்

அச்சிடப்பட்டது

சிதம்பரம்.

கர௵ பங்குனீ௴ 1892 March

இதன் விலை அணா ௧.

# மகாஜநம் கூடவேண்டியதற்காகக்குறித்த
# ஸ்ரீகுரு ஸத்தியாஷாடசபையின்
# மெம்பர்கள் விவரம்.

ம—ா—ா—ஸ்ரீ

1 ,, ப்ரம்மஸ்ரீ ஸ்ரீநிவாஸசாஸ்திரிகளவர்கள்
அக்கிராசனாதிபதி.

2 ,, பட்டஸ்ரீ பாலசரஸ்வதி நாராயணசாஸ்திரிகளவர்கள்.
உபஅக்கிராசனாதிபதி.

3 ,, கே. நாராயணஸாமி அய்யரவர்கள்
காரியதரிசி.

4 ,, வாசுதேவசாஸ்திரிகளவர்கள் உபகாரியதரிசி.

5 ,, வைத்திநாதய்யரவர்கள்
கிளை அக்கிராசனாதிபதி.

6 ,, இராமச்சந்திரய்யரவர்கள் கிளைச்சபைக்காரியதரிசி.

7 ,, இராதாகிருஷ்ணய்யரவர்கள் நடேக்காரிவரி.

8 ,, நாராயணய்யரவர்கள். ,,

9 ,, கோபாலகிருஷ்ணய்யரவர்கள். ,,

10 ,, ப[illegible]ய்யரவர்கள் ,,

11 ,, ம. கிருஷ்ணஸாமி அய்யரவர்கள் ,,

12 ,, ரா. கிருஷ்ணசாமி ஐயரவர்கள். ,,

13 ,, சு. சுப்பிரமணிய அய்யரவர்கள் ,,

14 ,, ரா. சுப்பிரமணிய ஐயரவர்கள் ,;

15 ,, கெ. சுப்பிரமணிய ஐயரவர்கள் ,,

16 ,, சுப்பய்யரவர்கள் ,,

17 ,, வெங்கட்டராமசாஸ்திரியள். ,,

18 ,, ராமசுவாமிசாஸ்திரியர். ,,

19 ,, தி. நாராயணசாமி அய்யரவர்கள். ,,

20 ,, வெங்கட்டரமணய்யரவர்கள். ,,

21 ,, கா. தி. சுப்பிரமணியய்யரவர்கள். ,,

சி. சாமிநாதய்யரவர்கள்

3 ,, ரா. ம. சுப்பிரமணிய ஐயரவர்கள்
24 ,, தர்மராஜசாஸ்திரிகளவர்கள் பெரியகுளம்.
25 ,, டி. ராமய்யரவர்கள். ,,
26 ,, கணபதி அய்யரவர்கள், வைக்கம்.
27 ,, சுப்பிரமணியஅய்யரவர்கள் ,,
28 ,, லெட்சுமணஅய்யரவர்கள் வடக் காஞ்சேரி.
29 ,, சங்கரநாராயணசாஸ்திரிகளவர்கள் எலப்பள்ளி.
30 ,, வெங்கடேசசாஸ்திரிகளவர்கள். ,,
31 ,, நாராயணய்யரவர்கள் சங்கீதமங்கலம்.
32 ,, ராமராயர் அன்னியூர்.
33 ,, வெங்கய்யர் திருக்குன்னம்.
34 ,, வெங்கிடசுப்பையரவர்கள் அவியனூர்
35 ,, கோவிந்தய்யரவர்கள் யெணதிரிமங்கலம்.
36 ,, சபாபதிஐயரவர்கள்திருநாரையூர்(சிதம்பரம்வ[illegible])
37 ,, ஸபாபதி ஐயரவர்கள் எடையூர்.
38 ,, வெங்கட்டராமையரவர்கள் கடுவங்குடி.
39 ,, குப்புஸாமி ஐயரவர்கள் மேலாநல்லூர்.
40 ,, அண்ணாவையரவர்கள் அருவாப்பாடி.
41 ,, குப்புஸாமிஅய்யரவர்கள் நீடூர்.
42 ,, கிஷ்ண கனபாடிகள் நீடூர்.
43 ,, ராமச்சந்திரய்யரவர்கள் அரிமொழிதேவன்.
44 ,, ராதாகிருஷ்ணய்யரவர்கள் கொருக்கை.
45 ,, சாமிசாஸ்திரியள் கொருக்கை.
46 ,, சிவஸாம்புவையரவர்கள் வாஞ்சிராஜபுரம். [ரம்.
47 ,, ராமச்சந்திரகனபாடியள் நடுக்காவேரிவாஞ்சிராஜபு
48 ,, சுப்பிரமணிய ஐயரவர்கள் மாயவரம்.
49 ,, கிஷ்ண கனபாடிகள் மாயவரம்.
50 ,, ராமபத்திரய்யர் மாயவரம்.
51 ,, நாராயணசாமிய்யரவர்கள் நல்லாடை.
52 ,, நாராயணய்யரவர்கள் குரும்பகரம்.
53 ,, சுப்பய்யரவர்கள் குரும்பகரம்.
54 ,, முத்துவையரவர்கள் கருவேலி.
55 ,, ராஜய்யரவர்கள் வடமழை.
56 ,, கெணபதிசாமிசாஸ்திரிகள் முத்தரசபுரம்.
57 ,, கிஷ்ணய்யரவர்கள் கும்பகோணம்.
58 ,, வைத்தினாதைய்யரவாகள் சிதம்பரநாதபுரம்.
59 ,, வைத்தினாதய்ய கள் நெம்மேலி.
60 ,, வைத்தினாதை வர்கள் நடராஜபுரம்.
61 ,, ராஜப்பையர கள் நடராஜபுரம்.

# க்காவேரி ஸத்தியாஷாட சபை.

இச்சங்கம் கலியுகாதி ௪௲௯௯௧-வது விரோதிஹு ஆவணிமீ
நடுக்காவேரியில் சிதம்பரம் ப்ரம்மவித்தியா பத்திரிகாசிரியர்
ப்ரம்மஸ்ரீ கு. ஸ்ரீநிவாஸ சாஸ்திரியாரவர்கள் பிரேரேபனை
யால் ஸ்தாபிக்கப்பட்டது.

## இதன்கருத்து:—

தென்னாட்டில் வசிக்கும் "ஹிரண்யகேசியர்" என வழங்கப்
படும் அந்தணர் சமூகத்தை நல்லொழுக்கத்துடன் வைத்து
அவர்கள் குலகுருவாகிய-சத்தியாஷாட மகரிஷியினது சூத்தி
ரத்தை விளக்குதலும் அச்சாரியாரை ஒற்றுமையுடன் தற்
காலம் தோன்றும் பல துராசாரங்களுக்குள்ளாகாது காத்த
லும் நடுக்காவேரி சத்தியாஷாடமூர்த்தி திவ்விய சந்நிதியை
அபிமானித்தலுமேயாம்.

இதற்கு அச்சாரியார் ஐந்து குடும்பங்களுக்கு மேற்பட்டுள்
ள எவ்விடத்திலும் கிளைச்சபைஸ்தாபித்துக்கொள்ளவேண்டும்.
இச்சபையின் அவயவியாகிய ஒவ்வொரு குடும்பத்தாரும்
வருஷம்௧-க்கு 0 2 0. அல்லது முதலாய் 2 0 0. சந்
தா கொடுத்தல் வேண்டும். சுபகாரியங்களில் விவாகத்திற்கு
0 4 0ம், மற்ற சுபங்களில் 0 2 0ம் நடுக்காவேரி சத்தி
யாஷாடமூர்த்திக்குக் காணிக்கையாக சம்பாவனை கொடுக்கவே
ண்டும். அதிகவிவரம் வேண்டியவர் நடுக்காவேரியில் சபை
அக்கிராசனாதிபதிக்காவது காரியதரிசிக்காவது லேபிலாவது
ரிப்ளைகார்டாவது அநுப்பித்தெரிந்துகொள்ளலாம்.

அக்கிராசனாதிபதி:—கு. ஸ்ரீநிவாஸசாஸ்திரியரவர்கள்,
சிதம்பரம்.

காரியதரிசி,—வைத்தியம்-நார[illegible]சாமி-அய்யரவர்கள்,
நடுக்காவேரி.

ஶ்ரீரஸ்து

ஶ்ருதி:

ஹிரண்யகேஶோ ரஜஸோ விஸாரேஹிர்துநிர்வாத இவ த்ரஜீமாந் ॥ ஶுசிப்ராஜா உஷஸோ நவேதா யஶஸ்வதீரபஸ்யுவோ ந ஸத்யா:

கநகாஞ்ஜலிஹிரண்யகேஶ: கல்பஸூத்ரவியாயிபி:|
ஸம்ஸ்க்ருததந்த்ரம் ஸத்யாஷாடாசார்யமஹம் ॥

ஹிரண்யகேசிய குலத்தவராயுள்ள நம்மவருக்குத்தெரியப்படுத்துவதுயாதெனில்,

இக்காலத்தில் கலிகாலக் கொடுமையால் வேதசாஸ்திரங்களும் ஸதாசாரங்களும் முற்றிலும் குறைந்திருக்கிறது. அதிலும் நம்மவர்களிலும் நல்ல கர்மசிரத்தையுள்ளவர், அநேகர் இருப்பினும் அவரவர் தமக்கு வேண்டிய கருமங்களைச் செய்துகொள்ளத் தகுந்த உபாத்தியாயரின்மையால் அவ்வித சிறகருமங்களை நடத்தாமலிருந்துவிடுவதால் நமமவருக்குள்ளே அக்கினிஹோத்தரம் நித்தியௌபாஸநம் வைசுவதேவம் முதலிய உத்தம பிராமண கருமங்கள் சுமார் பதினைந்து வருடகாலத்துக்குள் முற்றிலும் இல்லாமல் ஒழிந்துவிட நேர்ந்தது. அவ்வித நல்ல உத்தம காரியங்களைச் செய்ய வதிகாரிகளாய் அதற்கு வேண்டிய வேதாத்தியயனம் முதலியவிவிஷயங்களும் நிறைந்த அனேகர் இருப்பினும் அவர்களுக்கு நமது ஸ்ரீகுரு சத்தியாஷாட மூர்த்தியின் திவ்விய சூத்திரம்ஸிரௌதஸ்மார்த்தங்கள் முற்றிலும் அகப்படாமையானும் அவை அகப்பட்டாலும் அவற்றிற்கண்டபடி

செய்து வைக்கவேண்டியவிற்பத்தியுள்ளஉபாத்தியாயர்கள்கிடைக்காததனாலும்அவர் இஷ்டம்கைகூடவில்லை. இப்பொழுதோ நமதுசாதி, மற்றைய பிராமணசாதிகளுள் தோன்றி நடைபெற்றுவரும் சுராபானம், மாம்ஸபக்ஷணம், மிலேச்சமதப்பிரவேசம, ஸமுத்திரயாத்திரை, விதவாவிவாஹம் முதலிய பல அநாசாரங்களில்லாத சுத்தஜாதியிருத்தலால் இப்பொழுதே அநேக பாகயாக பசுயாகங்கள் முதலான ஸத்கருமங்களை அநுஷ்டித்தால் மிகவும் அநுநம்மவர்க்கு ஒரு உயர்வையும் கொடுப்பதுமன்றி, ஸ்ரீகுருகிருபையால் கலிகாலப்பாவம் நம்மிடம் வராமலும் செய்யும். அவ்விதம்நமது குலத்துக்கு ஒரு பெருமைசெய்ய எவரும் பின்னிடமாட்டார்கள் என்பது எமக்குத் தெரிந்ததாய் இருந்தாலும் உங்களிடம் அதைச்சொல்லி எவ்விதத்திலும உங்கள் மேன்மையை விருத்திசெய்து உங்களுடன்கலந்து யாமும் பெருமைபெற வேண்டியிருத்தலால் அடியிற்கண்ட விண்ணப்பத்தை உங்கள் மகாசபையின் முன்கொண்டுவரத் துணிந்தேன்.

அதாவது,

நம்மவருக்கு இப்பொழுதுள்ள கிராமங்கள் சுமார் ௬௬. இவைகளுள் உள்ள குடும்பங்கள் சுமார் ௫௫௰. இதில் நம்மவரே உபாத்தியாயம்செய்விப்பது. மதுரைமலையாளம் தஞ்சாவூர் மஞ்சகுப்பம் ஜில்லாக்களில் ௯ கிராமந்தான். மற்றகிராமங்கள் எல்லாம்இதரர்கள் செய்வித்துவருகிறார்கள். இவர்களுள் இதரர் செய்விக்கிறவிடத்தில் எவரிடத்திலும் நமதுசூத்திரம் பாஷ்யம் கல்பம் காரிகை இல்லை. அவர்முற்றிலும் ஆபஸ்தம்பம்முதலிய பலசூத்திரத்திலும் செய்துவைக்கிறார்கள். நம்மவரேசெ

ய்துவைக்கிற விடங்களிலும் இரண்டொரு இடங்கள் தவிர மற்றதெல்லாம் பாதிக்குமேல் அன்னிய சூத்திரக்கல்பத்தான். ஆகையால் கூடியசீக்கிரத்தில் பூர்ணாத்தியயனமும் விற்பத்தியும் நமதுசூத்திரத்தில் பூர்வாபர சிரௌதஸ்மார்த்தங்களில் ஞானமும் நிஸ்ஸம்சயமான பயிற்சியும் உள்ள உபாத்தியாயர் குறைந்தது (௰) பதின்மராவது ஏற்படவேண்டியவரை படிப்பிக்கவேண்டும். அதற்காக அடியிற்கண்டபடி ஏற்பாடுசெய்யவேண்டும்.

அதாவது,

௧. நடுக்காவேரியில் ஸ்ரீஸத்தியாஷாட மூர்த்தியின் சன்னிதியில் "ஸ்ரீகுரு ஸத்தியாஷாடபாடசாலை என்கிற பெயருடன் ஒருபாடசாலை வைக்கவேண்டும்.

௨. ஸ்ரீஸத்தியாஷாடஸ்வாமி தேவாலயத்தின் பக்கத்தில் ரூபா ௨௱-க்கு ள் அதற்காக ஒரு கட்டடம் கட்ட வேண்டும்.

௩. அதில் ௰௨-பேர்கள் வித்தியார்த்திகளை நம்மவராகப்பொறுக்கிக் குறைந்தது ஐந்துவருஷம் நமது பாடசாலையில் படிக்கவேண்டும் என்கிற ஏற்பாடுடனும் அவர்களுக்கு அன்னம் வஸ்திரம் புஸ்தகமுதலிய சௌகரியம் நாம் செய்து கொடுக்கிறஏற்பாடுடனும் சேர்த்துப்படிப்பிக்கவேண்டுவது. அவர்களுக்குள்ள மற்ற வியவஸ்தைகள் பாடசாலைத்துவக்கில் வெளியிடுவோம்.

௪. இவர்களுக்காக வருஷம் ௪௰-கலநெல் சம்பளத்தில் வேதம் சூத்திரம் இரண்டும் சொல்லிவைக்க ஒரு உபாத்தியாயரும், விற்பத்தி தர்மசாஸ்திரஞ்சொல்லிவைக்க அதே சம்பளத்தில் ஒருஉபாத்தியாயரும், ௩௫-கலநெல் சம்பளத்தில் ஒரு பரிசாரகனும், ௧௮-கலநெல் சம்பளத்தில் ஒருஉக்கிராணக்காரனும் நியமிக்கவேண்டும்.

134 ரு. இதற்காக நெல் கலம் ௧௱௩௰௪. பிள்ளைகள்போ
360 சனம் ஏனையசிலவுக்காக ௩௱௬௰-கலமும் விளக்கு புஸ்த
6 கம் வகைறாவுக்கு ௬-கலமும் ஆ ௫௱-கலவரும்படி வ
500 ரும்பூஸ்திதி ஏற்படுத்தி சாஸ்வத சிலாசாஸனம்செய்துரி
ஜிஸ்தர் செய்து வைக்கவேண்டும்.

மற்றவிதிகள் பாடசாலாரம்பத்தில் செய்யவும்.

6000 ஆகையால் இதற்காக ரூபா ௬௲-இருந்தாலன்றி முடியா
து. நம்மவா இப்பொழுது வீடடுவர்த்தனையாகக்கொடுக்
கும ரூபா 0 2 0 க்காக முதல் ரூபா 2 0 0
1000 கொடுத்துவிடும் பக்ஷத்தில் அதுவே சுமார் ௲-க்கு மே
ற்படுமாகையால் அதையும் சேர்த்துக்கொண்டு அவசிய
5000 ம் மற்ற ரூபா ௫௲-மும் அந்த பாடசாலை கட்டிடத்தி
ற்குரூபா ௨௫0-ம் ஆ ரூ 5250-0-0 அவசியம்நம்மவரிடத்தி
லேயேவசூலிக்கவேண்டியது. ஆகையால்நம்மவர் இதுபெரி
ய குலோத்தாரபுண்ணியம், குருபக்தி புண்ணியம், வே
தோத்தாரணபுண்ணியம், வைதிகாபிமானபுண்ணியம், அ
ன்னதான புண்ணியம், அநுதாக்ஷணபுண்ணியம், ஆலய
பிரதிஷ்டா புண்ணியம், வித்தியாதானபுண்ணியம், ஸ்
வஜனுதாரணபுண்ணியம், பிரம்ம பிரதிஷ்டாபுண்ணியம்,
ஆகிய இவ்வளவு அளவற்ற புண்ணியங்களுக்கிடமாதலி
ன் இவ்விஷயத்தில் தவராது சிரத்தை வைத்து தாம்
வீடுகளில் சந்தோஷத்துடன் செய்யும் கலியாண சுபகா
ரியங்களில் இது ஒரு பெரிய ஜாதிகலியாண மகோற்சவ
சுபகாரியமென்றெண்ணித் தமது சக்திமீறியும் இது க
லியாணம் கார்த்திகளில் மேளகாறன் முதலியவருக்கு
க்கொடுக்கும் பெருந்தொகைப்பணத்தின் பிரயோசனத்
தைக்காட்டிலும் அதிக பிரயோஜனங் கொடுக்கும் மகா

புண்ணிய கைங்கரியமென்பதை மனதில் வைத்து உதாரகுணத்துடன ஈசுவரபக்தியுடன் இரங்கிய மனதுடன் ஜாதியபிமானத்துடன் சமயாபிமானத்துடன் பரலோக விசுவாசத்துடன் இக பர சுகங்கள் இரண்டையும் கொடுக்கும் இம்மகா தர்மத்திற்கு முன்வந்து போட்டிபோட்டுத் தர்மத்தைக் கொள்ளைகொண்டு இத்துடன் வரும் புஸ்தகத்தில்கையொப்பமிட்டு மகாதர்மப்பிரதிஷ்டை பெற்று பரமேசுரர் பிரசாதத்துக்கும் ஸ்ரீகுருநாதர் அநுக்கிர்த்துக்கும் பாத்திரர் ஆவாரெனப் பிரார்த்திக்கின்றேன்.

இங்ஙனம்,

நடுக்காவேரி சத்தியாஷ்டசபை அக்கிராசனாதிபதி.

கு. ஸ்ரீநிவாஸ சாஸ்திரி.

குறிப்பு:—எந்தத்துகையும் அந்த ஊரில் எம்மால் அதிகாரம் பெறுபவரிடம் கொடுத்து ரசீதும் வாங்கிக் கொள்ளவும். ரூபா ௧0 இ மேற்பட்டால் ஒரு அணா ஸ்டாம்பி ஒட்டி ரசீது கொடுக்கவேண்டும். கூடியசீக்கிரம் இதேவருஷம் விஜயதசமியன்று பாடசாலை ஆரம்பிக்கவேண்டிய ஏற்பாடுகளை செய்யவேண்டும்.

கு. ஸ்ரீ.

ஸ்ரீ ஸத்யாஷாடஸமாஜாய நம:

## நடுக்காவேரியில்தோன்றிவிளங்கும்ஸ்ரீஸத்தியாஷாடசபையின் உ வதுவருஷ சரித்திரம்.—

இப்பொழுதுஇச்சபைக்குள்ளமெம்பர்கள். 7

ம—ா—ா—ஸ்ரீ

கு. ஸ்ரீநிவாஸசாஸ்திரியள்

அக்கிராசனாதிபதி

,, பட்டஸ்ரீபாலஸரஸ்வதி நாராயணசாஸ்திரியள்

உப அக்கிராசனாதிபதி.

,, நாராயணசாமிஅய்யர்

காரியதரிசி.

,, வாஸுதேவசாஸ்திரியள்

உபகாரியதரிசி.

,, வைத்தினாதைய்யர்.

கிளைச்சபை அக்கிராசனாதிபதி.

,, S. ராமச்சந்திரய்யர் கிளைச்சபை காரியதரிசி.

அவயவிகள்:—

,, கே. சுப்பரமணியஅய்யர்.

,, சு. சுப்பரமணியய்யர்.

,, ரா. சுப்பரமணியய்யர்.

,, வெ. இராதாகிருஷ்ணஅய்யர்

,, சி. பஞ்சனதய்யர்.

,, வை சுப்பய்யர்.

,, அ. நாராயணசாமிஅய்யர்.

,, ரா. நாராயணசாமிஅய்யர்.

,, ச. ராமஸ்வாமிசாஸ்திரியள்.

,, வெங்கட்டராமசாஸ்திரியள்.

,, ம. கிருஷ்ணசாமிஅய்யர்.

,, கோபாலகிருஷ்ணஅய்யர்.

இந்தவருடத்தில்கூடியகூட்டங்கள் 7

இந்தக்கூட்டங்களால் பேசியோசித்துதீர்மானத்திர்க்குக்கொண்டுவரப்பட்ட சங்கதிகள் ரிபோர்ட்டுபுஸ்தகத்தில் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

| | | | |
|---|---|---|---|
| இவ்வருடவரும்படி மொத்தம் ரூபாய் | 71 | 0 | 0 |
| செலவு. | | | |
| அத்தியயனபட்டருக்கு | 7 | 0 | 0 |
| சபைவிஷயமாக புத்தகங்களச்சிட்டதற்குக்கூலி | 24 | 4 | 0 |
| ஸத்தியாஷாட மூர்த்திக்குப் பூஜை நைவேத்தியத்திற்காக | 27 | 12 | 0 |
| ஆ செலவு | 59 | 0 | 0 |
| பாக்கி | 12 | 0 | 0 |

இந்த்தடவை சபையார்விசாரணைக்குவந்த இரண்டு ஆசாரவிசாரங்களும் முடிந்தது.

இம்முறை நடுக்காவேரிப்படித் துரை தர்மம் துவக்கமாகி ரூபாய் 750 0 0 செலவு செய்யப்பட்டிருக்கிறது அவற்றின் கணக்கு வரவு பஞ்சாயித்து சுப்பரமணியஅய்யரிடமிருக்கிறது.

இவ்விதம்தான் அரும்பாடுபட்டுச்சம்பாதித்தபெரும்பொருளை நமதுபந்துக்களிடம் வைத்த பேரன்பினால் நம்மவர்படித்துறைக்காகக் குடுத்துஉதவிசெய்த புண்ணியவானாகிய சுப்பய்யரவர்கள்தனதுபுண்ணியத்திரவியம்உபயோகப்படுத்தபட்ட இந்தஸ்தலத்தில்தானே ஸ்ரீஹரிப்பிரம்மேசுவர ஸ்ரீகுருமூர்த்திகளின் சரணாரவிந்த ஸாயுச்சியத்தையடைந்திருந்தும் இப்போதுதற்காலம் அந்தவேலைமுடிந்து அவர் கண்குளிரப்பார்

க்காமல் ஸ்ரீகைலாஸபதவியையடைந்த விஷயத்தைப்பற்றிச் சபையார் மிகவும் விசனமுற்றவர்களாய் ஸ்ரீகுருகிருபாவிசேஷத்தால் நல்லபுண்ணியலோகத்தையடைந்திருக்கவேண்டுமென்றுயெதிர்பார்க்கிறோம்.

ஸத்தியாஷாடபாடசாலையென்ற ஒருபாடசாலையை நியமிக்கவேணுமென்று நமதுசபையில் ஆலோசனைக்குவந்திருக்கும் விஷயத்தைப்பற்றி கமிட்டிநியமனம் வரையிலாயிருக்கிறது.

இந்தவருஷத்தின் வரவுசெலவுக்கணக்குவிபரமும் சபையின்கணக்குவிபரமும்இதில்சேர்க்கப்பட்டிருக்கிறது

இதுவரையிலுள்ள கிளைச்சபைகள் 24. இதில்சென்றவருஷமிருந்த 21 சபைகள் போக இந்த வருஷத்தில்சேர்ந்த சபைமூன்றேயானாலும் அவைகள்தேசாந்திரத்தில் வெகுதூரத்தில் மலையாளநாட்டில்ஏற்பட்டன ஆதலால் வெகுதேசங்களிலும் நமதுசபைவிருத்தியடைந்தவிஷயத்தைப்பற்றி நமதுசபையார் மிகஆனந்தமுள்ளவர்களாயிருக்கவேண்டும்.

அநேகமாய்சென்றவருஷத்துக்கு இவ்வருஷக்கூட்டங்கள்குறைவு. அதற்க்குக்காரணம்இன்னதென்றுதெரியவில்லை.

இவ்வருஷத்தில்முழுவதும் 7 சபைகளைவெகுசிரமத்துடன் கூட்டிவைத்ததற்க்காகநமதுசபையின்பொது காரியதரிசிஅவர்களுக்கு சபையாரனேகவந்தனமுள்ளவர்களாயிருக்கிறார்கள்.

அக்கிராசனாதிபதியுடன் தூரதேசங்கள்சென்று அவ்விடங்களில் சிலசபைகளேற்படுத்த சகாயமாயிருந்தும் வெளிக்கிளைச்சபைகளில் சிலவிடங்களிலிருந்து பணம்வசூல்செய்யவேண்டியதற்கும் சிரமம்யெடுத்துக்கொண்ட உபகாரியதரிசி ப்ரம்ஸ்ரீ வாஸுதேவசாஸ்திரிகளுக்குசபையார்மிகவும்பூர்ணாசீர்வாதமுள்ளவர்களாயிருக்கிறார்கள்.

உள்ளூர் அக்கிராசனாதிபதி வைத்தினாதய்யர் அவர்களுக்கும், காரியதரிசி ராமச்சந்திரய்யர்அவர்களுக்கும் படித்துறைவிழயத்தில் வெகுசிரத்தையுடன் வேலைபார்த்துவந்த வெ. சுப்புவய்யர், ம. கிருஷ்ணஸ்வாமிஅய்யர் முதலியவர்களு

க்கும் நடுக்காவேரியில் தற்காலம் நமதுசபையாரால் ஆதரிக்
கப்பட்டுநடந்துவரும் ஒவ்வொருதர்மங்களுக்கும் மொத்த வர
வு செலவுகளையும் வரவுசெலவுக்கணக்குகளை யெழுதுவதையும்
பக்திவிசுவாசங்களுடனும்விடாமுயற்சியுடனும் இதுவரையில்
கிரமம்யெடுத்துக்கொண்டும் இனியெந்தெந்ததர்மங்களிலும்இ
தேவிதமான முயற்சியெடுத்துக்கொள்ள சித்தமாயிருக்கிற
ம—ள—ள—ஸ்ரீ மு. சுப்பரமணிய அய்யரவர்களுக்கும்ம-ள-ள-ஸ்ரீ
ச. சுப்பறமணியய்யரவர்களுக்கும் சபையார் ஸ்ரீ குருசன்னிதா
னத்தில்ஆயுராரோக்கியஸத்ஸந்தான ஐசுவரியங்களைப்பற்றிமி
கவும் பிரார்த்திக்கிறார்கள்.

சென்றவருஷம்சபையார்முன் கவனத்துக்குவந்த நெ
ம்மேலிகிராமவிஷயம் இவ்வருஷத்தில் நமதுசபையில் சேர்
ந்து நமதுவிவஸ்தைகளுடன் கலக்கும்படி நேர்ந்தவிஷயத்
தைப்பற்றி சபையார்மிகவும் ஆனந்தமுடையவர்களாயிருக்கி
றார்கள்.

நம்மவர்களில் அவியனூரில் நடந்தவிவாகத்தில் சம்பந்
தியாயுள்ள சுப்பய்யர், கோபாலகிருஷ்ணய்யர் என்பவர்கள்சம்
பாவனைவழக்கமில்லையென்று ஆக்ஷேபித்த விஷயத்தை அவி
யனூர்காரியதரிசி சாமிய்யரவர்கள் நமக்குத்தெரிவித்திருப்
பதால் இம்முறை அதுவிஷயத்தை அவசியம்கவனிக்கவேண்
டியது. அதற்குள்ளவிவகாரங்களைப்பற்றி அவர்களைக்கே
ட்கவேண்டியது. இவ்விஷயத்தை பட்டமங்கலம்கிராமத்தார்
அவசியம்கெவனிக்கவேண்டியதாய் நமதுசபையார் தெரியப்
படுத்தவேண்டியது.

சங்கீதமங்கலம் விவாஹவிஷயத்தில் சிதம்பரநாதபுரத்
திற்குப் போயும் கும்பகோணத்தில் சிதையம்மாளைச்சேர்ந்
தவர்களைவிசாரித்தும் கடைசியில் சங்கீதமங்கலத்துக்கு நே
ரில்போய் இவடத்தில் நடக்கவேண்டிய ஏற்பாடுகளைச்செய்
துவந்த உபக்கிராசனாதிபதி பட்டஸ்ரீ பாலசரஸ்வதி
நாராயண சாஸ்திரியள் அவர்களுக்கும்சபையார்விசேஷ
வந்தனமுள்ளவர்களாயிருக்கிறார்கள்.

நமது சபைக்கு மூலகர்த்தாவாயிருந்து இதற்காக நாம் எழுதியசரித்திரத்தில் கண்டபடி வெகுசிரமப்பட்டுசபையை யெவ்விதத்திலும் முன்னுக்குக் கொண்டுவர முயற்சியெடுத்து வேலைசெய்துவரும் நமது அக்கிராசனாதிபதி அவர்களுக்கு ஈசுவரபக்தியும் கல்வியும் மகதைசுவரியமும் வாக்சித்தியும் ஸௌந்தரிநாயகீஸமேத ஸ்ரீ ஹரிபிரம்மேசுவரசுவாமி கிருபையால் உண்டாகும்படி பிரார்த்தித்து சபையார் அனேகவந்தனமுள்ளவர்களாயிருக்கிறார்கள்.

நமது கிராமத்தில் நம்மவர்களைப்பூர்ணகிருபையுடன் ஆள்கொண்டு ஆதரிக்கசன்னிதானம் செய்துவரும் நமது குலகுருவாகிய ஸ்ரீ ஸத்தியாஷாடமூர்த்தியினது திவ்வியசரணகிருபாவிலாசத்தால் மென்மேலும் இந்தசபை விருத்தியடையவும் கிராமந்தழைத்தோங்கவும் கிராமமகாஜனங்கள் ஒற்றுமையுடன் விருத்தியடையவும் ஹிரண்ணியகேசியர்கள் குலம் மென்மேலும் சர்வாங்கங்களும் ஓங்கிவளரவும் சர்வஜீவதயாபராயணசாக்ஷாத் ஸ்ரீ ஹரிபிரமேசுவரரையும் சகலலோகமாதாவாகிய ஸ்ரீ ஸவுந்தரநாயகியும் ஹிரணியகேச குருமூர்த்தியையும் சபையார் திருஸந்தியாகாலங்களிலும் அநேககோடிசாஷ்டாங்கம் செய்து பற்பல ஸ்தோத்திரங்களுடன் பிரார்த்திக்கிறார்கள்

கு. ஸ்ரீநிவாஸசாஸ்திரிகளவர்கள்.

அக்கிராசனாதிபதி

நாராயணசாமி அய்யரவர்கள் காரியதரிசி

இதுவரையிலுள்ள சபைகளும் அதன் காரியதரிசிகளும் அவர் விலாசங்களும்.

| | | | |
|---|---|---|---|
| 1. | நடுக்காவேரி | S. ராமசந்திர ஐயர் | திருவையாறு போஸ்டு |
| 2. | கும்பகோணம் | நாணு ஐயர் | கும்பேசுவரன்கோவில் தெரு. |
| 3. | மாயூரம் | ச. வைத்தினாதையர் | கர்ணம் பட்டமங்கலத்தெரு. |
| 4. | கல்லாடை | வைத்தினாதையர் | மேலக்கிரகாரம மாயூரம்தாலுகா |
| 5. | குரும்பகரம் | அ. கிருஷ்ணசாமி ஐயர் | காரைக்கால் போஸ்டு. |
| 6. | நீடூர் | க. சுப்பிரமணிய ஐயர் | மாயூரம் தாலுகா. |
| 7. | ஆழிவாய்ப்பாடி. | அண்ணாவையர் | ஷை |
| 8. | மேலாநல்லூர் | ரெங்கசாமி ஐயர் | ஷை |
| 9. | கடுவங்குடி | வெங்கிடராமையர் | ஷை |
| 10. | அரிமுழிதேவன் | பஞ்சநத ஐயர் | ஷை |
| 11. | வாஞ்ராஜபுரம் | சுப்பிரமணிய ஐயர் | ஷை |
| 12. | கொருக்கை | ராதாகிருஷ்ண ஐயர் | ஷை |
| 13. | வடமழை | ராஜப்பையர் | திருத்துறைப்பூண்டி போஸ்டு. |
| 14. | முத்திரசபுரம் | கணபதிராமசுவாமிசாஸ்திரிகள் | ஷை |
| 15. | கருவேலி | முத்து ஐயர் | நாகப்பட்டணம் தாலுகா |

| | | | |
|---|---|---|---|
| 16. | திருக்குன்னம் | பெருமாள் ஐயர் | விழிப்புரம் போஸ்டு. |
| 17. | சங்கீதமங்கலம். | சுந்தர ஐயர் | ஷை |
| 18. | அன்னியூர் | ராமஐயர் | ஷை |
| 19. | இடையூர | சபாபதிஐயர் | விருத்தாசலம்போஸ்டு |
| 20. | அவியனூர | சாமி ஐயர் | பண்ணுருட்டிபோஸ்டு |
| 21. | சிதம்பரம் | முத்து ஐயர் | தேரடிப்பிள்ளையார்கோவில்தெரு |
| 22. | எலப்பள்ளி | சாமிநாதய்யர் | பாலக்காடுபோஸ்டு |
| 23. | வடக்காஞ்சேரி | சுப்பிரமணிய ஐயர் | திருச்சூர் கொச்சி. |
| 24. | வைக்கம் | கிழி. மகாலிங்கம் பரமேசுவரய்யன் பட்டோலை காரரயணன் நீலகண்டய்யன் | சேர்த்தலை போஸ்டு. |
| 25. | செம்பேலி. | கிருஷ்ணய்யர் | சீர்காழி போஸ்டு. |